மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை : திரு.பி.இராமர்

ந.க.எண்:1540/2017/தி3 நாள்: .12.2017

பொருள் : மதுரை மாவட்டம் - மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம் - புதுப்பட்டி கிராமம் - ரீசர்வே எண்.50/1B1, 1B2,1B3 – 57/1A1pt, 58/1, 59/1, 59/5A, 1B, 60/1 & 60/3-ல் 113 மனைகள் பிரிக்கப்பட்டதில் 63 மனைகள் விற்பனை செய்யப்பட்டது போக மீதமுள்ள மனைகள் வரன்முறை செய்தல்- வரன்முறைக்கட்டணம் செலுத்த தெரிவித்தல் - தொடர்பாக.

பார்வை :
1) அரசாணை எண்.78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்:04.05.2017 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண்.125, பாகம்-III பிரிவு 1(a), நாள்:04.05.2017
2) அரசாணை எண்.172, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்: 13.10.2017
3) உறுப்பினர் செயலர்(பொ), மதுரை உள்ளூர் திட்டக்குழுமம், மாநகராட்சி அலுவலக வளாகம், அண்ணாமாளிகை அவர்களின் ந.க.எண்.2197/2017/மதி.2 நாள்: 08.12.2017
4) இவ்வலுவலக நடவடிக்கைகள் ந.க.எண்.1540/2017/தி3 நாள்: 20.12.2017
5) திரு.இளமாறன், பிளாட் எண்.586, கற்பக நகர், 12வது தெரு,கே.புதூர், மதுரை - 625 007 அவர்கள் வி.நாள்: 22.12.17

-----------------

உத்தரவு:-

மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட புதுப்பட்டி ஊராட்சி, புதுப்பட்டி கிராமம் ரீசர்வே எண்.50/1B1, 1B2,1B3 – 57/1A1pt, 58/1, 59/1, 59/5A, 1B, 60/1 & 60/3-ல் 113 மனைகள் பிரிக்கப்பட்டதில் 63 மனைகள் விற்பனை செய்யப்பட்டது போக மீதமுள்ள மனைகள், பார்வை 1 மற்றும் 2ல் சுட்டிய அரசாணையின்படி நடவடிக்கை மேற்கொண்டு அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் முறைப்படுத்தி திருத்தியமைக்கப்பட்ட கொள்கையளவிலான மனைப்பிரிவு வரைபத்திற்கு (in principally accepted layout frame) ம.வ./ம.உ.தி.கு மனைப்பிரிவு எண்.25(R)/2017 என எண்ணிட்டு நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் திரு.எம்.இளமாறன் என்பவருக்கு பார்வை 3-ல் காணும் கடிதம் மூலம் உள்ளூர் திட்டக்குழுமம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

ஒரு சதுர மீட்டருக்கு ரூ.30/- வீதம் அரசு கணக்கில் செலுத்தப்பட வேண்டும். மேலும், வளர்ச்சிக் கட்டணம் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.25/- வீதம் உள்ளாட்சியின் தனிக்கணக்கில் செலுத்தப்பட்ட பின்னரே, இம்மனைப்பிரிவில் அமையும் தனித்த மனைகளுக்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என பார்வை 3-ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

பார்வை 5-ல் காணும் கடிதத்துடன் கீழ்க்காணும் விபரப்படி முறைப்படுத்துதல் கட்டணம் மற்றும் வளர்ச்சிக்கட்டணம் செலுத்தப்பட்டதற்கான செலுத்துச்சீட்டு இணைத்து வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | கட்டண விபரம் / இடத்தின் மொத்த அளவு (ச.மீ) | ஒரு சதுர மீட்டருக்கு ரூ. | செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ. | செலுத்தப்பட்ட தொகை ரூ. | தொகை செலுத்தப்பட்ட சலான் எண் மற்றும் நாள் |
|---|---|---|---|---|---|
| 1. | முறைப்படுத்துதல் கட்டணம் (unsold) 8132 ச.மீக்கு | 30/- | 243960.00 | 243960.00 | கருவூல செலுத்துச் சீட்டு எண்: / 22.12.2017 |
| 2. | வளர்ச்சிக் கட்டணம் (unsold) 8132 ச.மீக்கு | 25/- | 203300.00 | 203300.00 | ஊராட்சியில் வழங்கப்பட்ட பல்வகை வரவு ரசீது எண்: 31755/22.12.2017 |
| | மொத்தம் | | 447260.00 | 447260.00 | |

மேற்கண்டவாறு வரன்முறைப்படுத்துதல் கட்டணம் மற்றும் மேம்பாட்டுக்கட்டணம் செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து கீழ்க்கண்ட விற்பனை செய்யப்படாத மனைபிரிவுகளுக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு முறைப்படுத்தப்பட்ட மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

| வரிசை எண் | பிளாட் எண் | பரப்பளவு (ச.மீ-ல்) |
|---|---|---|
| 1. | 9 | 92.07 |
| 2. | 9A | 130.06 |
| 3. | 10A | 258.27 |
| 4. | 11 | 307.04 |
| 5 | 12 | 212.84 |
| 6 | 13 | 240.41 |
| 7 | 25 | 156.17 |
| 8 | 26 | 146.88 |
| 9 | 27 | 164.36 |
| 10 | 28 | 170.10 |
| 11 | 29 | 157.93 |
| 12 | 30 | 181.16 |
| 13 | 31 | 130.06 |
| 14 | 66 | 117.26 |
| 15 | 67 | 178.63 |
| 16 | 69 | 119.09 |
| 17 | 73 | 112.29 |
| 18 | 74 | 113.87 |
| 19 | 77 | 125.70 |
| 20 | 78 | 125.70 |
| 21 | 79 | 125.70 |
| 22 | 80 | 121.89 |
| 23 | 81 | 148.18 |
| 24 | 82 | 148.18 |
| 25 | 83 | 148.18 |
| 26 | 84 | 148.18 |
| 27 | 85 | 137.96 |
| 28 | 86 | 137.96 |
| 29 | 87 | 137.96 |
| 30 | 88 | 134.13 |
| 31 | 98 | 133.36 |

| | | |
|---|---|---|
| 32 | 99 | 133.36 |
| 33 | 100 | 161.70 |
| 34 | 101 | 109.62 |
| 35 | 102 | 109.62 |
| 36 | 103 | 109.62 |
| 37 | 104 | 109.62 |
| 38 | 105 | 160.26 |
| 39 | 106 | 193.00 |
| 40 | 107 | 183.25 |
| 41 | 108 | 178.02 |
| 42 | 109 | 172.80 |
| 43 | 110 | 167.22 |
| 44 | 111 | 191.29 |
| 45 | ownersite | 217.76 |
| | மொத்தம் | 8131.58 ச.மீ |

நிபந்தனைகள் :

1. நில உரிமம் குறித்து உறுதி செய்யும் பொறுப்பு உள்ளாட்சியையே சார்ந்ததாகும்.
2. கொள்கை அளவிலான ஒப்புதல் அளிப்பதன் மூலம் நில உரிமையை உறுதிபடுத்தவில்லை. கொள்கை அளவில் ஒப்புதல் அளிப்பதற்கு முன்பு பெறப்பட்ட நில உரிமை ஆவணங்களின் அடிப்படையில் அரசாணையின் படி மனைப்பிரிவு வரைபடம் தயார் செய்து கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்க வழிவகை உள்ளதா என்று மட்டுமே பார்க்கப்படுகிறது. சொத்தினை பரிமாற விரும்பும் எந்த நபரும் சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதி செய்து கொள்ள வேண்டும், அதன் மீது வேறு எவரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான நீதிமன்றத்தின் முன் தீர்க்கப்படலாம், நில உரிமை குறித்து முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை மற்றும் உள்ளாட்சித் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
3. இந்த மனைப்பிரிவு அமையும் நிலத்தின் மீது எந்தவித நில கையகப்படுத்தும் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நிலம் கையகப்படுத்துவதற்கான பட்டியலில் சேர்த்து அனுப்பப்படவில்லை எனவும், நிலமானது தமிழ்நாடு நகரப்புற நில உச்சவரம்புச் சட்டம் மற்றும் நில சீர்திருத்தச் சட்டங்களின் கீழ் கவரப்படவில்லை எனவும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
4. இந்த வரன்முறை மனைகளுக்கு மட்டுமே பொருந்தும், மனையில் அமையும் கட்டிடத்திற்கு வரன்முறையாகக் கருதப்பட மாட்டாது.
5. உள்ளூர் திட்டக் குழும அலுவலகத்தில் அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளாட்சி அமைப்பு ஒப்புதலின்றி மாற்றம் செய்யக் கூடாது.
6. நகர் ஊரமைப்புத் துறை கொள்கை அளவிலான (In Principle) ஒப்புதல் அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை, அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறையோ உள்ளாட்சி துறையோ பொருத்தமான அமைப்பு அல்ல.

வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)
மதுரை கிழக்கு.

26.12.17

பெறுநர்:

திரு.எம்.இளமாறன்
பிளாட் எண்.586, கற்பக நகர்,
12வது தெரு, கே.புதூர்
மதுரை - 625 007.

நகல் : ஊராட்சி செயலாளர், புதுப்பட்டி ஊராட்சி.
(உரிய தொகையினை வசூல் செய்து ஊராட்சி நிதி
கணக்கு எண்.1-ல் வரவு வைத்து அறிக்கை சமர்ப்பிக்கவும்)

| அனுப்புநர் | பெறுநர் |
| --- | --- |
| திரு.ப.வேல்முருகன், பி.இ.,<br>உறுப்பினர் செயலர் (பொ),<br>மதுரை உள்ளூர் திட்டக்குழுமம்,<br>மாநகராட்சி அலுவலக வளாகம்,<br>3-ம் தளம், அண்ணாமாளிகை,<br>மதுரை - 2.<br>E.mail –ID : mlpa_ctcp@yahoo.in<br>www.tn.gov.in/dtcp | திரு.M.இளமாறன்,<br>பிளாட் எண்.586, கற்பக நகர்,<br>12வது தெரு, கே.புதூர்,<br>மதுரை-625 007. |
| ந.க.எண். 2039/2017/மதி.2 | நாள் : 08.12.2017 |

ஐயா,

பொருள் : மனைப்பிரிவு - வரன்முறைப்படுத்துதல் - மதுரை உள்ளூர் திட்டக்குழுமப் பகுதி - மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம் - கிழக்கு தாலுகா - புதுப்பட்டி கிராமம் - ரீசர்வே எண்கள்.50/1B1, 1B2, 1B3 – 57/1A1pt, 58/1, 59/5A, 1B, 60/1 & 60/3-ல் 113 மனைகள் பிரிக்கப்பட்டதில் 63 மனைகள் விற்பனை செய்யப்பட்டது போக மீதமுள்ள மனைகள் வரன்முறை செய்யக் கோருதல் - சம்பந்தமாக.

பார்வை :
1) மனுதாரர் திரு.M.இளமாறன், மதுரை அவர்களின் விண்ணப்பம், நாள் 15.09.17.
2) உள்ளூர் திட்டக்குழும வரன்முறைப்படுத்தல் மனைப்பிரிவு ம.வ./ம.உ.தி.கு எண்.25(R).2017, நாள் 08.12.2017.

--------------

மேற்காண் பொருள் தொடர்பாக, வரன்முறைப்படுத்தல் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கி உத்தரவு மற்றும் வரைபடங்கள் தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர், மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், மதுரை அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்ற விபரத்துடன் உள்ளாட்சியை அணுகி தனித்த மனைகளை வரன்முறைப்படுத்திக் கொள்ள தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

உறுப்பினர் செயலர் (பொ),
மதுரை உள்ளூர் திட்டக்குழுமம்.

8.12.17